**பத்திரிகை வெளியீடு**

கொழும்பு, 22 மார்ச் 2017

Good Food, Good Life

## Maggi இற்கு மீண்டும் ஒரு முறை மகத்தான வெற்றி!

*SLIM-Nielsen விருதுகள் நிகழ்வில் ''வருடத்திற்கான இளையோரின் அபிமானத்தை வென்ற உணவு வர்த்தகநாமம்' என இலங்கையிலுள்ள இளம் தலைமுறையினரின் அமோக வாக்குகளை அள்ளிக் குவித்துள்ளது*

இந்த ஆண்டிற்கான SLIM-Nielsen விருதுகள் நிகழ்வில், இளம் தலைமுறை நுகர்வோரால், நான்காவது தடவையாகவும், 'வருடத்திற்கான இளையோரின் அபிமானத்தை வென்ற உணவு வர்த்தகநாமம்' என, அமோக வாக்குகளை நெஸ்லே நிறுவனத்தின் Maggi வர்த்தகநாமம் அள்ளிக் குவித்துள்ளது. Maggi வர்த்தகநாமம், SLIM-Nielsen மக்கள் விருதுகள் நிகழ்வில் தொடர்ந்தும் ஐந்தாவது ஆண்டாகவும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த வெற்றியானது, Maggi வர்த்தகநாமத்தின் மீது நுகர்வோர் வைத்துள்ள நம்பிக்கை மற்றும் அதன் உற்பத்தி வரிசையில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த Daiya கோழி இறைச்சி சுவையூட்டப்பட்ட நூடில்ஸ் உற்பத்தி மீது அவர்கள் கொண்டுள்ள அபிமானம் ஆகியவற்றிற்கு சிறந்த ஒரு சான்றாக அமைந்துள்ளது. இப்புதிய உற்பத்தியின் சுவையானது, உள்நாட்டில் இளம் தலைமுறையினர் மத்தியில் Maggi இன் பிரபலத்தை மேம்படுத்தியுள்ளது.

தமது உணவில் காரச்சுவையை அனுபவிக்க விரும்புகின்ற பதின்ம வயதினருக்கு, காரமான மற்றும் சிறந்த சுவைக்கலவை கொண்ட ஒரு உற்பத்தி வடிவமாக Maggi Daiya கோழி இறைச்சி சுவை சேர்க்கப்பட்ட நூடில்ஸ் கிடைக்கப்பெறுகின்றது. கல்சியம் மற்றும் பிரபலமான வாசனைத் திரவியங்களின் செழுமை நிரம்பியதுடன், அவை, உற்பத்தியின் மகத்தான சுவைக்கு பங்களிப்பாற்றுகின்றன.

*நெஸ்லே நிறுவனத்தில் உணவுத் துறைக்கான உதவித் தலைமை அதிகாரியான பிரியதர்ஷினி கருணாரட்ன அவர்கள் கூறுகையில், ''இந்த விருதை வென்றுள்ளமை எமக்கு மிகுந்த பூரிப்பை ஏற்படுத்தியுள்ளதுடன், அதனை மிகவும் பணிவுடன் ஏற்றுக்கொள்கின்றோம். வர்த்தகநாமத்தின் இதயத்தில் எமது நுகர்வோரே எப்போதும் நடுநாயகமாக வீற்றிருப்பதுடன், அவர்களுடைய தேவைகள் மற்றும் விருப்பங்களை நாம் நிறைவேற்றும் வகையிலேயே எமது உற்பத்திகள் அனைத்தும், புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. எமக்கு ஆதரவை வழங்குவதுடன், எம்மீது நம்பிக்கை வைத்துள்ள எமது அனைத்து நுகர்வோருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். அவர்கள் எப்போதும் Maggi உலகில் நடுநாயகமாக வீற்றிருப்பதுடன், அவர்களுக்கு 'வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவே மகிழ்ச்சி' என்பதை உறுதிசெய்வதற்கான வழிமுறைகளை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்போம்,'' என்று குறிப்பிட்டார்.*

கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக, இலங்கையிலுள்ள வீடுகளில் நம்பிக்கைமிக்க ஒரு விருப்பத் தெரிவாக Maggi திகழ்ந்து வந்துள்ளது. உள்நாட்டில் நுகர்வோரின் தேவைகள் மற்றும் விருப்பங்கள் மாற்றமடையும் சமயங்களில் அவர்களுக்குப் பொருத்தமான ஒரு உற்பத்தியாக தொடர்ந்தும் திகழ்வதை உறுதிப்படுத்தும் முகமாக, கடந்த காலங்களில் அதன் உற்பத்தி வரிசையானது விஸ்தரிக்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வந்துள்ளது. தனது உற்பத்திகள் அதி சிறந்த ஊட்டச்சத்துக்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை உறுதிசெய்வதில், நெஸ்லே நிறுவனம் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற முயற்சிகளின் ஒரு பகுதியாக, Maggi மிக சமீபத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருந்தது. மஞ்சள், ஜாதிக்காய், கொத்தமல்லி, சீரகம் மற்றும் ஏலக்காய் போன்ற இலங்கையில் சமையலறைகளில் வழமையாக காணக்கூடிய பிரபலமான 'வீட்டு மூலப் பொருட்களைக்' கொண்டதாக அதன் நூடில்ஸ் உற்பத்தி வரிசை புதுப்பிக்கப்பட்டுள்ளதுடன், நுண்ஊட்டச்சத்து குறைபாடுகளை தீர்த்து வைப்பதற்கு எமது நாடு மேற்கொண்டு வருகின்ற

முயற்சிகளுக்கு உதவும் வகையில், விட்டமின் A மற்றும் கல்சியம் ஆகியவற்றின் செழுமை நிரம்பியதாகவும் உள்ளது.

*நெஸ்லே நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான ஷிவானி ஹெக்டே அவர்கள் கூறுகையில், ''ஒரு உள்நாட்டு நிறுவனமாகத் தொழிற்படும் அதேசமயம், சர்வதேச ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை உபயோகிக்கும் எமது திறன், மற்றும் நிபுணத்துவம் ஆகியனவே நெஸ்லே நிறுவனத்தின் பலமாக உள்ளன. 110 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த நாட்டில் ஆழமாக வேரூன்றி, இலங்கையின் உள்நாட்டு பல்தேசிய நிறுவனமாக நிலைபெற்றுள்ள வகையில், உணவுத் துறையில் எமது நுகர்வோரின் 1 ஆவது இடத்திலுள்ள தெரிவாக திகழ்வதையிட்டு நாம் பெருமையடைகின்றோம். உள்நாட்டில் நுகர்வோரின் தேவைகளுக்கு அமைவாக நாம் தொடர்ந்தும் எமது உற்பத்திகளை புத்தாக்கத்திற்கு உட்படுத்தி, புதுப்பிப்பதுடன், நுண்ஊட்டச்சத்து குறைபாடுகளுக்கு தீர்வு காண்பதில் நாடு மேற்கொண்டு வருகின்ற முயற்சிகளுக்கு உதவி, எமது நுகர்வோர் தமது உணவுப் பழக்கவழக்கம் மற்றும் வாழ்க்கைமுறையில் அறிவுபூர்வமான தெரிவுகளை மேற்கொள்ளும் வகையில் அவர்களை வலுவூட்டி, அதன் மூலமாக, பெறுமதிச்சங்கிலியிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தி, ஆரோக்கியமான எதிர்காலத்திற்குப் பங்களிப்போம்,'' என்று குறிப்பிட்டார்.*

SLIM-Nielsen மக்கள் விருதுகள் நிகழ்வானது, இலங்கையில் இடம்பெறுகின்ற முன்னணி சந்தைப்படுத்தல் விருதுகள் நிகழ்வாக அமைந்துள்ளது. Nielsen நிறுவனம், நாடளாவியரீதியில் 15 முதல் 60 வயதிற்குட்பட்டவர்கள் மத்தியில் கட்டமைக்கப்பட்ட ஒரு வினாக்கொத்தின் மூலமாக அவர்களின் கருத்தின் அடிப்படையில் விருதுகளுக்கு உரிய வர்த்தகநாமங்களையும், நபர்களையும் தெரிவு செய்துவருகின்றனர்.

---

**பத்திரிகை ஆசிரியருக்கான குறிப்பு:**

உலகின் மிகப் பாரிய உணவு மற்றும் பான வகை நிறுவனமாக நெஸ்லே திகழ்ந்து வருகின்றது. உலகெங்கிலும் 189 நாடுகளில் அதன் உற்பத்திகள் கிடைக்கப்பெறுவதுடன், வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல் மற்றும் ஆரோக்கியமான எதிர்காலத்திற்குப் பங்களித்தல் ஆகிய நெஸ்லே நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்து கொள்வதில் அதன் 328,000 ஊழியர்களும் தீவிர அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். மக்கள் மற்றும் அவர்களின் செல்லப் பிராணிகளுக்கு பரந்த வகைப்பட்ட உற்பத்திகள் மற்றும் சேவைகளை நெஸ்லே வழங்கி வருகின்றது. *Nescafé* அல்லது Maggi போன்ற சர்வதேச அளவில் பிரபலமான உற்பத்திகள் முதல் Nestomalt போன்ற உள்நாட்டு விருப்பத்தெரிவாக அமைந்த உற்பத்திகள் என அது 2,000 இற்கும் மேற்பட்ட வர்த்தகநாமங்களைக் கொண்டுள்ளது. நிறுவனத்தின் ஊட்டச்சத்து, ஆரோக்கியம் மற்றும் நலன் தொடர்பான மூலோபாயத்தின் அடிப்படையிலேயே அதன் செயல்திறன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. சுவிட்சலாந்து நாட்டின் வெவே என்ற நகரில் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள நெஸ்லே நிறுவனம், 150 ஆண்டுகளுக்கு முன்னர் அங்கே ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

1906 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தொழிற்பட்டுவருகின்ற நெஸ்லே நிறுவனம், பிரதானமாக உள்நாட்டு மூலப்பொருட்களை உபயோகித்து, 90% இற்கும் மேற்பட்ட தனது உற்பத்திகளை உள்நாட்டிலேயே தயாரித்து வருகின்றது. சந்தை மூலதனவாக்கத்தைப் பொறுத்தவரையில் கொழும்பு பங்கு பரிமாற்றச் சந்தையில் முதல் நான்கு ஸ்தானங்களில் திகழுகின்ற நிறுவனங்களுள் ஒன்றாக அது காணப்படுவதுடன், 25,000 இற்கும் மேற்பட்ட விவசாய மற்றும் பண்ணைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்திற்கும் பங்களிப்பாற்றி வருகின்றது. நாட்டிலுள்ள மிகவும் நன்மதிப்புப் பெற்ற உணவு மற்றும் பான வகை நிறுவனங்களின் பட்டியலில் 1 ஆவது ஸ்தானத்திலுள்ள நிறுவனம் என்ற இனங்காணல் அங்கீகாரத்தையும் அது சம்பாதித்துள்ளது (LMD சஞ்சிகை வெளியிட்டுள்ள 2016 ஆம் ஆண்டிற்கான மிகவும் நன்மதிப்பு பெற்ற நிறுவனங்களின் தர வரிசை).

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள www.nestle.lk இனை பார்க்கவும்.




இடமிருந்து வலப்புறமாக : ரதினி டி கொஸ்தா, உதவித் தலைமை அதிகாரி - சந்தைப்படுத்தல் சேவைகள்,நெஸ்லே; பிரபாத் கருணாரத்ன, உற்பத்திப் பிரிவு முகாமையாளர் - உணவு, நெஸ்லே; தீபால் அபேசேகர, சந்தைப்படுத்தல் மற்றும் பொது விவகாரங்களுக்கான தலைமை அதிகாரி, மக்கள் வங்கி; சமந்தா சமரவிக்கிரம, உதவி வர்த்தகநாம முகாமையாளர் - உணவு, நெஸ்லே; நுவான் ரத்னாயக்க, வர்த்தகநாம முகாமையாளர் - உணவு, நெஸ்லே; ரமேஷா ரணவீர, வர்த்தகநாம முகாமையாளர் - உணவு, நெஸ்லே; பிரியதர்ஷினி கருணாரட்ன, பிரதித் தலைமை அதிகாரி - உணவு, நெஸ்லே; ரொஷான் பெரேரா, உதவித் தலைமை அதிகாரி - Nestlé Professional, நெஸ்லே.






தாங்கள் பெற்றுக்கொண்ட விருதுடன் நெஸ்லே விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அணி.